# பொதுத் துறை துரிதமாய் மின்னிலக்கமயமாக $3.8 பி.

பொதுத் துறை மின்னிலக்கமயமாக மாறுவதைத் துரிதப்படுத்த அரசாங்கம் இந்த நிதி ஆண்டில் ஏறத்தாழ $3.8 பில்லியன் தொகையை தகவல், தொடர்பு தொழில்நுட்பக் குத்தகைகளுக்கு செலவிடும்.

கவ்டெக் எனும் அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பு நேற்று இதனைத் தெரிவித்தது.

கடந்த மார்ச் 31ம் தேதி முடிந்த நிதி ஆண்டில் செலவிடப்பட்ட $3.5 பில்லியன் தொகையைவிட இது கிட்டத்தட்ட 10% அதிகமாகும்.

நடப்பு நிதி அண்டில் செலவு செய்யப்படும் தொகையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களும் அடங்கும். செயற்கை நுண்ணறிவைக் கொண்டு பள்ளிப் பாடங்களை மதிப்பிடும் கட்டமைப்பு, வாழ்வின் வெவ்வேறு கட்டங்களில் இருக்கும் பயனாளர்களுக்குச் சேவைகளை வழங்கும் லைப்எஸ்ஜி செயலிக்கான மேம்பாடுகள் அவற்றில் சில.

அரசாங்கத்தின் அந்த தகவல் தொடர்பு தொழில்நுட்பக் குத்தகைகளில் சுமார் 83%, சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்று கவ்டெக் அமைப்பு கூறியது.

குறைவான நிதி மதிப்பீடு கொண்ட சிறிய நடுத்தர நிறுவனங்களும் அரசாங்கக் குத்தகைகளில் விண்ணப்பம் செய்ய உதவும் வகையில், சிறிய இணையக் கட்டமைப்புகளுக்கு கூடுதல் சேவைகளையும் திட்டங்களையும் அரசாங்கம் சேர்க்கும்.

முந்தைய ஆண்டுகளின் முதலீடுகள் ஏற்படுத்திய உத்வேகத்தையும் கொவிட்-19 கிருமிப் பரவலால் மின்னிலக்கமயத்தில் பெற்ற ஆதாயங்களையும் இவ்வாண்டின் தகவல் தொடர்பு தொழில்நுட்பச் செலவினம் பயன்படுத்திப் பெருக்கும் என்று கவ்டெக் அமைப்பு அதன் அறிக்கையில் குறிப்பிட்டது.

$3.8 பில்லியன் தொகையில் $500 மில்லியன், பொதுத் துறையில் செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டை அதிகரிக்க ஒதுக்கப்படும்.

மேம்பட்ட சேவைகளை வழங்கவும், தரவுகளை அடிப்படையாகக் கொண்ட சிறந்த முடிவுகளை எடுக்கவும் உற்பத்தித் திறனைப் பெருக்க செயல்பாடுகளை மேம்படுத்தவும் செயற்கை நுண்ணறிவு ஆற்றல் அரசாங்கத்துக்கு உதவும் என்று அமைப்பு கூறியது.

மேலும் $2.7 பில்லியன் தொகை, பல்வேறு துறைகளில் மின்னியல் சேவைகளை மாற்றியமைத்து, ஒருங்கிணைக்கவும் சீரமைக்கவும் பயன்படுத்தப்படும். இதன் தொடர்பில் 250 திட்டங்கள் கொண்டுவரப்படும்.

இச்சேவைகளில் 44%, குடிமக்களுக்கும் வர்த்தகங்களுக்குமான சேவைகளைத் துரிதப்படுத்தும். இணையம் வழியான கிளவுட் (cloud) கணினி முறையில் அவை உருவாக்கப்படும்.

2024 மார்ச் 31ம் தேதிக்குள் தகுதிபெறும் பொதுச் சேவைகளில் 70 விழுக்காட்டை இணையம் மூலமாக வழங்க அரசாங்கம் திட்டமிடுகிறது என்று கவ்டெக் அமைப்பு கூறியது.

## தேர்வு: அறுவை சிகிச்சை முகக்கவசம் கட்டாயம்

தொடக்கப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வு (பிஎஸ்எல்இ) மற்றும் ஜிசிஇ வாய்மொழித் தேர்வு நடைபெறும்போது அனைத்து மாணவர்களும் வாய்மொழித் தேர்வாளர்களும் அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும்.

அறுவை சிகிச்சை முகக்கவசம் இல்லாத மாணவர்களுக்கு தேர்வு நடைபெறும் இடத்திலேயே அவற்றை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உருமாறிய கிருமிகளை கவனத்தில்கொண்டு கிருமிப்பரவல் அபாயத்தைக் குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சும் சிங்கப்பூர் தேர்வு, மதிப்பீட்டுக் கழகமும் நேற்று வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவித்தன.

ஜூன் 1ஆம் தேதி நிலவரப்படி சுமார் 310,000 மாணவர்கள் அதாவது ஏறக்குறைய தகுதிபெற்ற 90 விழுக்காடு மாணவர்கள் தடுப்பூசிக்கு பதிந்து கொண்டுள்ளளர். மறுநாள் பள்ளி திறப்பதற்கு முன்பே ஞாயிற்றுக் கிழமை வரை 297,000 மாணவர்கள் முதல் தடுப்பூசியை போட்டுக் கொண்டனர்.

மாணவர்களையும் பள்ளி ஊழியர்களையும் கிருமித்தொற்றிலிருந்து பாதுகாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக மேம்பட்ட பாதுகாப்பு நிர்வாக நடைமுறைகள் தேர்வின்போது அறிமுகப்படுத்தப்படுகிறது என்று அமைச்சும் கழகமும் அறிக்கையில் குறிப்பிட்டன.

வாய்மொழித் தேர்வுகளில் முகபாவனைகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாது. அதனால் அறுவை சிகிச்சை முகக்கவசங்களை அணிவதால் தேர்வு எழுதுவோர் பாதிக்கப்படமாட்டார்கள் என்று கல்வி அமைச்சும் சிங்கப்பூர் தேர்வு, மதிப்பீட்டுக் கழகமும் கூறின.

இவ்வேளையில் நேரடியாக நடைபெறும் இணைப்பாட நடவடிக்கைகள் ஜூலை மாதம் 12ம் தேதி அன்று மீண்டும் தொடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது முன்னர் அறிவிக்கப்பட்ட தேதியை விட ஒரு வாரம் தள்ளிப்போகிறது.

## புக்கிட் மேரா வியூ, பியோ கிரசென்டில் பரிசோதனை நிறைவு: ஐவருக்கு தொற்று

புக்கிட் மேரா வியூ, பியோ கிரெசண்டில் வட்டாரங்களில் வசிப்பவர்கள், பணியாற்றுபவர்கள், அல்லது அங்கு சென்றவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு பரிசோதனைகளின் முடிவில் ஐந்து பேருக்கு கிருமித்தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அவர்கள் ஐந்து பேரும் புக்கிட் மேரா வியூயில் காணப்பட்டதாக சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டது. அந்த வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் சென்ற திங்கட்கிழமை நிறைவுபெற்றன.

சென்ற ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த பியோ கிரசென்ட் பரிசோதனைகளில் யாருக்கும் தொற்று கண்டறியப்படவில்லை.

புக்கிட் மேரா வியூ புளோக்குகள் 116, 117, 118, 119, 124ஏ, 124பி, 125, 126 ஆகியவற்றின் குடியிருப்பாளர்கள், அங்கு சென்று வந்தவர்கள் என மொத்தம் 2,133 பேர் பரிசோதிக்கப்பட்டனர்.

தொற்று கண்ட ஐந்து பேரில் 20 லெங்கோக் பாருவில் உள்ள உடற்குறையுள்ளோருக்கான நட்பார்ந்த வளாகத்தில் (Enabling Village) பணியாற்றும் 69 வயது துப்புரவுத் தொழிலாளரும் ஒருவர்.

இன்னும் இரண்டு பேருக்கு புக்கிட் மேரா வியூ சந்தை மற்றும் உணவங்காடி நிலையத் தொற்றுக் குழுமத்துடன் தொடர்பு உள்ளது. மேலும் ஒருவர் 119 புக்கிட் மேரா தொற்றுக் குழுமத்துடன் தொடர்பு உள்ளதாகக் கண்டறியப்பட்டது.

### 13 பேருக்கு புதிதாக தொற்று

சிங்கப்பூரில் நேற்று நண்பகல் நிலவரப்படி புதிதாக 22 பேருக்கு கொவிட்-19 கிருமி தொற்றியதாக சுகாதார அமைச்சு கூறியது.

இவர்களில் 13 பேர் சமூகத்தில் உள்ளவர்கள்; 9 பேர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்.

சமூகத்தில் தொற்று கண்ட 13 பேரில் மூவருக்கு கிருமித் தொற்றிய மற்றவர்களுடன் இதுவரை தொடர்பு ஏதுமில்லை. மற்ற 10 பேரும் தொற்றுச் சம்பவங்களுடன் தொடர்புள்ளவர்கள்.

அவர்களில் எட்டு பேர் ஏற்கெனவே தனிமையில் வைக்கப்பட்டிருந்தனர். மற்ற இருவரும் பரிசோதனைகளில் கண்டறியப்பட்டனர். ஊழியர் தங்குவிடுதிகளில் யாருக்கும் தொற்றில்லை.

சிங்கப்பூரில் கிருமி தொற்றியவர்களின் எண்ணிக்கை தற்போது 62,470 ஆகியுள்ளது.

### புதிய தொற்றுக் குழுமங்கள்

சிங்கப்பூரில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இரண்டு புதிய தொற்றுக் குழுமங்கள் அறிவிக்கப்பட்டன.

ஒன்று, 90 ரெட்ஹில் குளோசில் உள்ளது. அங்கு 69 வயது மாது உட்பட மூவருக்கு தொற்று கண்டுள்ளது. மற்றொன்று கடந்த 14ம் தேதி தொற்று உறுதி செய்யப்பட்ட வெளிநாட்டு இல்லப் பணியாளருடன் தொடர்புடையது.




புக்கிட் மேரா வியூ சந்தை, உணவங்காடி நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து, மூத்த குடியிருப்பாளர்களின் சிரமத்தைத் குறைத்து அவர்களிடத்தில் காய்கறிகளைச் சென்று சேர்க்க அடித்தள அமைப்புகள் மாற்று ஏற்பாட்டைச் செய்தன. ஃபேர்பிரைஸ் ஆன் வீல்ஸ் வேன், புக்கிட் மேரா வியூ புளோக் 123 கார்நிறுத்தும் இடத்துக்கு காய்கறிகளையும் மளிகைப் பொருட்களையும் சுமந்துவந்தது. **படம்: ஹெண்டர்சன் சமூக மன்றம்**

## பயண கட்டுப்பாடு தளர்வு: சிங்கப்பூர், வியட்னாம் பரிசீலனை

சிங்கப்பூரும் வியட்னாமும், வர்த்தகத்துக்கும் சில குறிப்பிட்ட சுற்றுப்பயணத் தளங்களுக்குமான பயணக் கட்டுப்பாடுகளை மெதுவாகத் தளர்த்துவது பற்றி பரிசீலித்து வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

எனினும் வியட்னாம் அதன் மக்களுக்கு எவ்வளவு விரைவாகத் தடுப்பூசி போடுகிறது என்பதைப் பொருத்தே தளர்வுகள் சாத்தியப்படும் என்றார் அவர்.

வியட்னாம் தலைநகர் ஹனோய்க்கு மேற்கொண்ட நான்கு நாள் பயணத்துக்குப் பின்னர் டாக்டர் விவியன் செய்தியாளர்களிடம் ஸூம் வழியாகப் பேசினார்.

ஹனோயில் புதிதாக நியமிக்கப்பட்ட வியட்னாமிய அதிபர் இங் யுவேன் சுவான் புக், பிரதமர் பாம் மின் சின், துணைப் பிரதமர் பாம் பின் மின் ஆகியோரை அவர் சந்தித்தார்.

பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இரு நாடுகளும் ஒரே விதமான உத்தியைப் பயன்படுத்தியுள்ளன. தீவிர பரிசோதனைகள், தனிமையில் வைத்திருப்பது, பரவலாகத் தடுப்பூசியைப் போடுவது ஆகியவை அதில் அடங்கும்.

வியட்னாமில் கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கிய மோசமான கிருமிப் பரவலைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவசியமற்ற வர்த்தகங்கள் மூடப்பட்டதுடன் ஒன்றுகூடுதல்களும் குறைக்கப்பட்டன.

ஏறத்தாழ 98 மில்லியன் பேர் கொண்ட அதன் மக்கள்தொகையில் 2 விழுக்காட்டினருக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டுத் தளர்வுகளை அடுத்த சில மாதங்களில் அல்லது இவ்வாண்டு இறுதிக்குள் தொடங்குவது பற்றி இரு நாடுகளும் பரிசீலித்து வருவதாகவும் டாக்டர் விவியன் தெரிவித்தார்.

## பிள்ளைகள் மின்னியல் சாதனங்கள் பெற $1 மி. உதவி



குறைந்த சம்பளக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு $1 மில்லியன் செலவில் மின்னியல் சாதனங்களும் கல்வி, மேம்பாட்டு தொகுப்புகளும் வழங்கப்படவுள்ளன. எஸ்பி குழுமம் அதன் எஸ்பி கிட்ஸ் எட் ஹார்ட் திட்டத்தின் கீழ் நன்கொடையாக நேற்று இதனை அளித்தது. எஸ்பி கிட்ஸ் எட் ஹார்ட் திட்டத்தில் பிள்ளைகளுடன் தொண்டூழியர் ஒருவர் உரையாடுகிறார். **படம்: எஸ்பி குழுமம்**

## ‘நிலைத்தன்மையான உள்கட்டமைப்பில் வாய்ப்புகள்’

கொரோனா பெருந்தொற்று சூழலில் தரமான, நீடித்து நிலைத்திருக்கக்கூடிய உள்கட்டமைப்பு சவாலான ஒன்று. அத்துடன், பருவநிலை மாற்றம், வேகமாக நகரமயமாகிவரும் சூழல் இதை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

எனினும் இதில் தனியார் துறை, பன்னாட்டு வளர்ச்சி வங்கிகள், அரசாங்கத் துறை போன்றவற்றுடன் பங்காளித்துவ அடிப்படையில் வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் அலுவலக அமைச்சர் இந்திராணி ராஜா கூறியுள்ளார்.

நிதி அமைச்சு, என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பு, சிங்கப்பூர் நாணய ஆணையம், ‘இன்ஃபிராஸ்ட்ரக்சர் ஆசியா’ நிறுவனம் ஆகியவை நடத்திய ஆசிய உள்கட்டமைப்பு மாநாட்டில் அவர் பேசினார்.

கொவிட்-19 பெருந்தாற்று உலகப் பொருளியல் 4.5% வீழ்ச்சிகாண காரணமாகிவிட்டது. அனைத்து ஆசியான் நாடுகளும் தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.6 % அளவு நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கின.

“செலவின அதிகரிப்பு, கட்டுமானப் பணிகளை முடுக்கிவிடுதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றால் ஏற்படும் உள்கட்டமைப்பு வளர்ச்சி பொருளியல் மீட்சிக்கு வழிவிடும் என்று ஆசிய நாடுகளும் பன்னாட்டு வளர்ச்சி வங்கிகளும் அடையாளம் கண்டுள்ளன. சில நாடுகள் ஏற்கெனவே உள்கட்டமைப்பு வளர்ச்சியை துரிதப்படுத்தியுள்ளன.”

“நாடுகள் தங்கள் வளங்களை பெருந்தொற்றை எதிர்ப்பதில் செலவிட்டு வரும் வேளையில் தனியார், பொதுத் துறைகள் செய்யும் கூடுதல் முதலீடு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று,” என்றார் அவர்.

## செய்திக்கொத்து

### தெம்பனிசில் விதிமீறிய இளையர்கள்

தெம்பனிஸ் திடல்களில் சென்றவாரம் கூடைப்பந்து, காற்பந்து விளையாடிய பல இளையர் குழுக்கள், ஐவருக்கு மேல் கூடக் கூடாது எனும் கொவிட்-19 பாதுகாப்பு நடைமுறை கட்டுப்பாடுகளை மீறியுள்ளனர். இளையர்கள் விளையாடும் படங்களைத் தமது ஃபேஸ்புக்கில் பதிவேற்றிய தெம்பனிஸ் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பே யாம் கெங், திடல்களை மூடப் போடப்பட்டிருந்த தடுப்புகளை அகற்றிவிட்டு அவர்கள் விளையாடியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு விதிமுறைகளை முதல் முறையாக மீறுவோருக்கு $300 அபராதம், இரண்டாம் முறையாக மீறுவோருக்கு $1,000 அபராதம் விதிக்கப்படும் என்பதை அவர் நினைவூட்டினார். அவர்களின் அடையாளத்தைத் தெரியப்படுத்துமாறு அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

### மூலாதார பணவீக்கம் உயர்வு

சிங்கப்பூரின் மூலாதார பணவீக்கம் நான்காவது மாதமாக மே மாதத்தில் ஆண்டு அடிப்படையில் 0.8% உயர்ந்தது.

குடியிருப்பு, தனியார் சாலைப் போக்குவரத்துச் செலவுகள் தவிர்த்த இந்த மூலாதார பணவீக்கம் ஏப்ரலில் 0.6% ஆக இருந்தது. ஏப்ரலில் 2.1% ஆக இருந்த ஒட்டுமொத்த பணவீக்கம் மே மாதல் 2.4% ஆக உயர்ந்தது என்று வர்த்தக தொழில் அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை கூறியது.

### சிஓஇ கட்டணங்கள் குறைந்தன

வாகன உரிமைச் சான்றிதழ்களுக்கான (சிஓஇ) நேற்றைய ஏலக்குத்தகையில் பெரும்பாலான பிரிவுகளில் கட்டணங்கள் குறைந்தன. 1,600சிசி அளவிலான சிறிய ரக கார்களுக்கான சிஓஇ $48,510லிருந்து $47,821ஆகக் குறைந்தது.

1,600சிசிக்கு மேற்பட்ட பெரிய ரக கார்களுக்கான சிஓஇ $60,109லிருந்து $56,032ஆனது. மோட்டார்சைக்கிள்கள் தவிர மற்ற வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய பொதுப் பிரிவு வாகனங்களுக்கான சிஓஇ $61,112.லிருந்து குறைந்து $58,001, ஆனது. வர்த்தகப் பிரிவு வாகனங்களுக்கான சிஓஇ $37,002லிருந்து குறைந்து $37,00 ஆனது. ஆனால், மோட்டார் சைக்கிள்களுக்கான சிஓஇ கட்டணம் $8,703லிருந்து $8,50ஆக குறைந்தது.

### வரிசெலுத்தாத சிகரெட் பறிமுதல்

ஈசூனில் இரண்டு லாரிகளில் இருந்து 2,982 பெட்டிகள் வரி செலுத்தப்படாத சிகரெட்டுகளை பறிமுதல் செய்யப்பட்டதுடன் 21 முதல் 48 வயதுக்குட்பட்ட நான்கு சிங்கப்பூர் ஆடவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக சிங்கப்பூர் சுங்கத்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவற்றுக்கான மொத்த வரியும் பொருள் சேவை வரியும் முறையே $254,660, $20,430 ஆகும். மூவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

### 2025ல் 437,000 பணக்காரர்கள்

சிங்கப்பூரில் மில்லியன் வெள்ளி வைத்திருக்கும் பணக்காரர்களின் எண்ணிக்கை 2025ல் 62% உயர்ந்து 437,000 ஆகக் கூடும் என்று கிரெடிட் சுவிஸ் வங்கி கூறியுள்ளது. ஒப்பு நோக்க 2020ல் நாட்டில் 270,000 பேரிடம் மில்லியன் வெள்ளி இருப்பு இருந்தது. கொவிட்-19 பரவலுக்குப் பின்னர் நிதித் துறையின் முக்கிய நகரங்கள் மீட்சி அடையும்போது இது நடக்கக்கூடும் என்று வங்கி அதன் 2021 உலகளாவிய சொத்து அறிக்கையில் கூறியது. கடந்த ஆண்டு சிங்கப்பூர் மக்கள் தொகையில் 5.5 விழுக்காட்டினர் மில்லியன் வெள்ளி வைத்திருந்த பணக்காரர்கள் என்றும் அறிக்கை குறிப்பிட்டது.

பொருளியல் ஏற்றதாழ்வை மதிப்பிடும் ஜினி எண் கெழு (coefficient) சிங்கப்பூரில் 2020ல் 78.3ஆக இருந்தது. இது ஜப்பான், தென் கொரியா, தைவானைவிட வெகு அதிகம்.

### ‘எஸ்ஜி எனேபல்’ ஊழியர்கள் 180 பேருக்கு பரிசோதனை

‘எனேபலிங் வில்லேஜ்’இல் பணிபுரியும் ஒரு துப்புரவுப் பணியாளருக்கு கிருமித்தொற்று ஏற்பட்டதை அடுத்து, அங்குள்ள ஊழியர்கள் சுமார் 180 பேர் பரிசோதிக்கப்படுவர் என்று எஸ்ஜி எனேபல் தனது ஃபேஸ்புக் பதிவில் நேற்று கூறியது. ரெட்ஹில்லில் உள்ள அந்த சமூக வணிக மையத்தில் இதுவரை 70க்கும் மேற்பட்டோர் அருகிலுள்ள சோதனை நிலையங்களில் பரிசோதனைக்குச் சென்றதாக அது கூறிற்று.